விடுதலைக் கூட்டணி

தலைவர்கள்

# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35 வ. ஆ. 2007 வைகாசி 13, ஐ. அவ்வல் 25, (26-5-76) புதன் புத்தகம் 30 இதழ் 10

# கைதானதை எதிர்த்து மக்கள்

# ஹர்த்தால்

தங்கள் அன்புக்கும் அபிமானத்துக்குமுரிய தமிழர்விடுதலைக்கூட்டணித்தலைவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டதற்கு தமது ஆட்சேபனையைத்தெரிவிக்குமுகமாக வடக்கு. கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் தாமாகவே முன்வந்து திங்களன்று (24-5-76) ஒரு முழு நாள் ஹர்த்தாலை மிகவும் அமைதியான முறையில் அனுஷ்டித்தனர்.

யாருடைய தூண்டுதலோ வேண்டுகோளோ இன்றி தமிழ்ப் பேசும் மக்கள் தாமாகவே முன்வந்து நடத்தி முடித்த இந்தப் பரிபூரண ஹர்த்தாலின்போது,கடைகள், உணவு விடுதிகள் யாவும் அடைக்கப்பட்டுக் கிடந்தன; பாடசாலைகள், மாணவ மாணவியர் போகாததால் வெறிச் சோடிக்கிடந்தன; மக்கள் போக்குவரத்து இன்மையால் பஸ் போக்குவரத்துக் குறைந்து காணப்பட்டது; சந்தைகள் எதுவும் கூடவில்லை; யாழ்ப்பாண மாநகரம் வெறுமையாக வெறிச் சோடிக் காட்சி தந்தது. கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. —3-ம் பக்கம் பார்க்க



## உடுப்பிட்டி சிவா கைதாகி விடுதலை!

சட்டமறுப்பு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச்செயல் அதிபர்களில் ஒருவரான திரு மு. சிவசிதம்பரமும் கைதுசெய்யப்பட்டாராயினும் பின்னர் அவர் விடுதலைசெய்யப்பட்டார். திரு. சிவசிதம்பரத்தை விடுதலைசெய்ததற்கு காரணம், தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியை கூறுபோடும் அரசியல் சதி நோக்கமும் இருக்கலாமென்று கருதப்படுகிறது. ஒன்றுபட்டிருக்கும் தமிழ் மக்களை பிரித்து அழிக்கும் சூழ்ச்சியாகவும் இது இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

## தமிழர் தளபதி அமிர், நவம், துரை, பண்டிதர் கைது!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவருமான தமிழர் தளபதி அமிர் தலிங்கம், சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம், பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம், ஊர்காவற்றுறை பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் மே 22ம் நாள் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்செய்தியையெழுதும் போது இந்நால்வரும் கொழும்பு பெஜட் வீதியிலுள்ள இரகசிய பொலிசாரின் விடுதியொன்றில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் பிரகடனத்தை ஒரு துண்டுப் பிரசுரமாகத் தயாரித்து அதை உரக்கவாசித்து பொது மக்களுக்கு விநியோ



கித்துக் கொண்டிருந்த போதே நாவலர் அமிர்தலிங்கமும் ஏனையோரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் உடனடியாக —4 ம் பக்கம் பார்க்க





### "என்னையும் கைது செய்க!"

—செல்வா

மே 22-சம்பவங்களின் போது துண்டுப்பிரசுரம் விநியோகித்திருந்த ஏனைய தலைவர்களை பொலிசார்கைதுசெய்த போது மூதறிஞர் செல்வாவும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவரைப்பொலிசார் கைது செய்யவில்லை. "இதோ நானும் சட்டத்தை மீறுகிறேன் —என்னையும் கைதுசெய்யுங்கள்" என்று 79வயது நிறைந்த அந்த மூதறிஞர் துணிச்சலுடன் கூறியபோது, பொலிசார் இரித்து மழுப்பி விட்டு அங்கிருந்து நழுவி விட்டனர்.



### யாழ்ப்பாணத்துக்கு 500 பொலிசார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டத்தை நசுக்குவதற்கென கொழும்பிலிருந்து 500 விசேட பொலிசார் யாழ்ப்பாணத்துக்கு அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் மே 22க்கு முன்னர் இவர்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# தமிழ் மொழிச் சட்டத்துக்கு இன்றைய நீதியமைச்சர் பீலிக்ஸ் அன்று தந்த வியாக்கியானம்!

'உங்களுடைய (ஐ. தே. க) பிரமாணங்களுக்கும் [தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பெற்ற பிரமாணங்கள் —1966] எமது பிரமாணங்களுக்கும் [பிரமாணங்கள் 1960ல் தமிழரசால் நிராகரிக்கப்பட்டவை] உள்ள அடிப்படை வேறுபாடுகள் எவை? அதை நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்—1958, அதன் தொடர்பாக அப்போது நடைபெற்ற விவாதம் என்பவற்றைக் கவனமாகப் படித்துப் பாருங்கள் மிகமிகப் பாரதூரமான வேறுபாடுகள் இருப்பதைக் காண்பீர்கள்.

## பண்டா கருதியது என்ன?

அந்த விவாதத்தின்போது (1958) திரு. பண்டாரநயக்கா பேசிய இரு பகுதிகளை வாசித்துக் காட்டவிரும்புகின்றேன். அந்தச் சட்டங்கள் மூலமும், பிரமாணங்கள் மூலமும் திரு. பண்டாரநாயக்கா என்ன கருதினர் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

சட்டபூர்வமாக shall, may (செய்யவேண்டும், செய்யலாம்) என்பன ஒரே கருத்துடையவை; வேறுபாடற்றவை என்று நீங்கள் கூறினீர்கள். சட்டத்தில் may இருக்கிறது. உங்கள் பிரமாணங்களில் shall இருக்கிறது. இதனுல்தான் நீங்கள் இரண்டும் ஒன்றெனக் காட்டப் பகீரதப் பிரயத்தனப்படுகிறீர்கள்.

## தமிழ் ஊழியருக்குக் கட்டாய சிங்களம்

சட்டத்தின் கருத்தாவான திரு. பண்டாரநாயக்கா இச்சரத்துக்கள் பற்றிஎன்ன கூறினுர்? என முதலிற் காண்போம். அரசு சேவை தொடர்பாக அவர் கூறியது இதுதான்:—

"அடுத்து அரசசேவை பற்றிக் கூறுவேன். தமிழிலே பயின்றவர் தமிழ்மொழி மூலம் அரசசேவைத்தேர்வுக்குத்தோற்றலாம். ஆனுல் அவர் சிங்கள வினுத்தாளுக்கு விடைஎழுதமுடியாது அப்படியானுல் அரசகரும மொழியான சிங்களத்தின் நிலை என்ன? என்று நீங்கள் கேட்கலாம். அவர் தற்காலிக நியமனம்பெறுவார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டவிதிகளின்படி அவர் அரசகரும மொழியில் தேர்ச்சிபெற வேண்டும். இல்லாவிட்டால் அவர் அரசசேவையிலிருந்து விலகியவராகக் கருதப்படுவார். சிங்களம் சகல தமிழ்ப் பாடசாலைகளிலும் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படும் நிலை உருவாகும் என நான் நம்புகிறேன். அப்போது சிங்களத் தகுதிக்குத் தனியான தேர்வு தேவைப்படாது. அதற்குச் சிறிதுகாலம் செல்லலாம் ஆனுலும் அந்த நிலை இயல்பாகவே ஏற்படும். அதில் எந்தத் தவறும் இல்லை:" [அஞ்சாட்டு—5-8-1958 தொகுதி 31]

## தமிழ்மொழிபெயர்ப்பு நிறுத்தப்படும்

கடிதத்தொடர்பு பற்றி திரு. பண்டாரநாயக்கா சொன்னது இதுதான்:-

"1960ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? இது அடிக்கடி எழுப்பப்படும் வினு ஆகும். தமிழ்ப்பெருங் குடிமகனுக்கு தமிழில் கடிதத்தொடர்பு கொள்ளும் உரிமை இருக்கவேண்டும். அதேநேரம் சிங்களம் ஆட்சி மொழி என்ற நிலையும் பாதுகாக்கப்படவேண்டும். அவருக்கு அரசமொழியாகிய சிங்களத்தில் பதில் அனுப்பப்பட வேண்டும். அவருடைய வசதிக்காகத் தமிழ் மொழிபெயர்ப்பு அல்லது கடிதச்சுருக்கம் அனுப்பப்படலாம் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களமும் கற்பிக்கப்படுவதால் தமிழ்ப் பிரதியை அனுப்புவதை நாம் வசதியாக நிறுத்திவிடலாம், இதில் என்ன தவறு? இதில் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை." (அஞ்சாட்டு 5-8-1958 தொகுதி 31) நிரல் 510

## தமிழ் இடைக்கால ஏற்பாடு

இதுவே காலஞ்சென்ற பிரதமர் கூறியது. இதுவே எமது கட்சியின் நிலை. அவர் தமிழ்மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மூலம் தமிழ் என்றைக்கும் நிரந்தரமாக இந்த நாட்டின் சமாந்தர அரசியல் மொழியாக இந்த நாட்டுச் சட்டங்களில் பிரதிட்டை செய்யப்படவேண்டுமென எண்ணவில்லை. கடிதங்களுக்கான தமிழ்ப் பிரதி காலகதியில் நீக்கப்படவேண்டும் என்பதே அவரது கருத்து.

அவரைப்பொறுத்தவரையில் தமிழ்மொழி பெயர்ப்பு அனுப்புவதை ஒரு தவிர்க்கமுடியாத, சட்டபூர்வமான கடப்பாடு என்று என்றும் கருதவில்லை. அங்கு சொல்லப்பட்டது காலாகாலத்துக்கும் தொடர வேண்டும், என்றும் அவர் கருதவில்லை 1960 ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதி அரசகரும மொழிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்வரை அனுமதிக்கப்படவேண்டும்; அதுவரை அது சட்டவிரோதமாக இருக்கக்கூடாது என்பதே அவரது கருத்து. அவ்வாறு விதிக்காவிட்டால் 1960 திசம்பர் 31வரை தமிழிலோ ஆங்கிலத்திலோ எதனையும் செய்யச் சட்டம் இடமளித்திருக்காது.

## தமிழ் உபயோகம் சட்டவிரோதம்,

அரசகருமமொழிச்சட்டத்தின் 2ஆம் பிரிவு தமிழிலோ ஆங்கிலத்திலோ செயற்படுவதை உறுதியாகத் தடை செய்கிறது அரசகரும மொழிச்சட்டம் 1957 சனவரி முதல் அமுலுக்கு வந்தது. ஆனுல் வழக்கிலிருந்த பிற மொழிகள் 1960 திசம்பர் 31 வரை உபயோகிக்க விசேட விதி உருவாக்கப்பட்டது: இதுவே சட்டம். மேற்குறிப்பிட்ட இறுதி எல்லைக்குப்பின் அரசகருமங்களை நடாத்தக்கூடிய ஒரே மொழி சிங்களமே ஆகும்.

## MAY & SHALL

காலஞ் சென்ற பிரதமர் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நிறைவேற்றினுர். அச்சட்டம் பற்றி என்ன கூறினுர்? தமிழ் பல்வேறு பணிகளுக்கு உபயோகிக்கப்படலாம் (May be Used) என்று கூறினுர். ஒவ்வோரிடத்திலும் அவர் "உபயோகிக்கப்படலாம்" என்றே கூறினுர். இதனைத் தவிரப் பிற சொற்களைப் பயன்படுத்தியிருந்தால் முடிவு என்னவாகியிருக்கும்?

அவர் (திரு. பண்டா) 'உபயோகிக்க வேண்டும்' (Shall be Used) என்று கூறியிருந்தால் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் சிங்களம் மட்டும் சட்டத்தைத் திருத்துவதாக நீங்கள் கூறலாம். சம அந்தஸ்து நிலையை ஏற்படுத்தாமல் 'சிங்களம் ஆட்சி மொழியாக வேண்டும்' என்றும் 'தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும்' என்றும் கூறமுடியாது. காலஞ் சென்ற பிரதமர் 'Shall' என்ற சொல்லை உபயோகித்திருந்தால் அவர் சம அந்தஸ்து நிலையை உருவாக்கியிருப்பார். ஒரு செயலை இரு மொழிகலுளிம் செய்ய வேண்டுமென்று சட்டபூர்வமான கடமையை ஏற்படுத்த முடியாது. அது முரண்பாடாகும். அவ்வாறு சொல்லியிருந்தால் எந்த மொழியிலும் கருமமாற்றலாம். இரண்டும் சட்டபூர்வமானவை.

## அப்படிப்பட்ட நிலை சம அந்தஸ்து ஆகும்

ஆனுல் அவர் அவ்வாறு கூறவில்லை. சட்ட மூலம் வரையறுக்கப்பட்ட சில செயல்களுக்குத் தமிழ் உபயோகிக்கப்படலாம் (May be Used) என்றே அவர் கூறினுர். அதுவும் மேற் குறிப்பிட்ட பகுதிகளுக்கு (சிங்களம் மட்டும்) அமைவாகவே செய்ய முடியும்.

நியாயமான தமிழ் உபயோகம் 1960 மார்கழிக்குப் பின்னும் பயன்படலாம். என்று காலஞ் சென்ற பிரதமர் குறிப்பிட்டார். அது செயற்படவேண்டுமென விரும்பினுர். ஆனுல் என்றென்றைக்கும் தமிழ்ப் பிரதி அனுப்பப்படவேண்டும் என்றுரா? இல்லை எந்தச் செயலாவது சட்டபூர்வமாகத் தமிழிலும் செய்யப்படவேண்டும் என்று கூறினுரா? இல்லை, தமிழ் உபயோகம் சட்டவிரோதமானதல்ல, உபயோகிக்கப்படலாம் என்றே அவர் கூறினுர்.

## செத்தும் கெடுத்தான்

நான் பாராளுமன்றத்துக்கு வருமுன்பே திரு. பண்டாரநாயக்கா இறந்துவிட்டார், அவர் உயிரோடிருந்தால் நான் இங்கு வந்திருக்கவே மாட்டேன் ஆனுல் நான் ஓர் அம்சம் பற்றியே கருத்துச் செலுத்துகிறேன். அவர் இறந்துவிட்டார் என்ற ஒரே காரணத்துக்காக அவர் எந்தக் கொள்கைகளுக்காக வாழ்ந்தாரோ அக்கருத்துக்களை மிகத் திருத்தமாகப் பாராளுமன்றத்தில் எடுத்துரைப்பதைத் தடுத்துவிட முடியாது. அவர் எக்கொள்கைக்காக வாழ்ந்தாரோ அக்கொள்கைகளும் அவரோடு இறந்து விட்டதாகக் கருதாதீர்கள்.

(ஹன்சார்ட்— 10—1—66 11—1—66, 23-4—66)

# ஆளுங் கட்சியை அண்டிப்பிழைக்கும் தமிழனே! உன்னைத்தான்....!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊர்வலத்திற்குத் தான் தடை, ஒலிபெருக்கிக்கு நேரக்கட்டுப்பாடு, பொலிஸ் தடியடி, என்று நினைத்திருந்தோம், இது வரை.

ஆளும் வர்க்கத்தின் தமிழ்த் தோழர்களும் அப்படித் தான் நினைத்திருந்தார்கள்.

கட்சிப்பாகுபாடின்றி, கன்னல் தமிழ் பேசும் எல்லோருக்குமே, அடி விழும்—அடக்கி ஆளப்படுவார்கள் தமிழர்கள் — என்ற உண்மையை பருத்தித்துறை மக்கள் சந்தை திறப்பு விழாவின்போது, அமைச்சர்கள் முன்னிலையில் நடந்தவை திருபித்துவிட்டன.

கூட்டத்திலே தடியடி, ஊர்வலத்திற்குத் தடை கடையடைப்பு, நிறைகுடம் தோரணங்கள், அகற்றப்பட்டன. இத்தனையும் நடந்தன — ஆட்சியினரின் அநியாயத்தை எதிர்த்துப் போரிடும் தமிழர் விடுதலை கூட்டணியின் கூட்டத்தில் அல்ல, ஆட்சியுடன் ஒத்துழைத்து, தமிழன் ஒற்றுமையைக் குலைக்கின்ற கூட்டத்தினரின் கூட்டத்திலேதான்.

ஆளுமினம் எந்தத் தமிழனையும் மதிக்கத்தயாராயில்லை. தமிழன் அமைச்சனுயிருந்தாலென்ன — அடிவருடியாயிருந்தாலென்ன — எந்தத் தமிழ்மகனையும் உள்ளச் சுத்தியோடு, ஏற்றிடத்தயாராயில்லை. தமிழன் உரிமைகளை விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை. தமிழனை தமிழ் மொழியினை சமத்துவமாக வைக்கத் தயாராயில்லை.

இந்த நாட்டிலே தமிழன் நிலை என்ன? இந்த நாட்டிலே தமிழன் அடிமை!

இவற்றை இப்போதாவது உணர்ந்துகொள்ள வேண்டும்—ஆளுமினத்திற்குவிருந்தளித்து வரவேற்பளித்து, மாலையிட்டு வாழ்பவர்கள்.

அடிவாங்கி ஓடி ஒதுங்கி, பின் அடித்த காலை வருடி அற்ப சலுகைகளைப் பெற்று வாழும் நாயிற் கடையான வாழ்க்கை வேண்டாம் தமிழினத்திற்கு.

ஏன் எட்டப்பன் என்ற பெயர் படைத்தாய்? இனத்தின் ஒற்றுமையை குலைத்து எதிரி பக்கம் சார்ந்து நின்ருய். இன்று நீ பெற்ற பரிசு பொலிஸ் தடியடி! இன்று தான் கண் விழித்தாய் இன்று தான் உன் நிலை உணர்ந்தாய், இன்று தான் தெரிந்து கொண்டாய், இதுவரை ஆளுமினத்திற்குவால் பிடித்தது வீண் என்று.

எந்தச் சலுகையும் தமிழினத்திற்கு வேண்டாம். இந்த நாட்டிலே சிங்கள மனிதன் ஒருவனுக்கு இருக்கின்ற உரிமை தமிழனுக்கும் வேண்டும். அந்த உரிமையைக் கூட நாம் கெஞ்சிக் கேட்கவில்லை, தட்டிக் கேட்கிருேம். என்ற நிலையை உணர்ந்துகொள்; வா வந்துவிடு. சேர்ந்துவிடு தமிழர் விடுதலைக் கூட்டணியில்.

ஆளும் கட்சியில் ஒரு தமிழன் கூட இல்லையே என்ற நிலை உருவாக நீ செய்ய வேண்டிய காரியம் இது. ஓ! தமிழினத்தைப் பிரித்திடும் சூழ்ச்சியை, சிங்கள ஆட்சி இதுவரை எப்படி வெற்றிகரமாக கையாண்டு வந்தது பார்த்தாயா?

அற்ப சலுகைகள்! அரை மந்திரிப்பதவி. ஒரு உத்தியோகம், இரண்டு ஆசிரிய நியமனம், ஒரு மாற்றம்.

நீ நடந்தாய் அல்லும் பகலும், ஒரு மந்திரிக்குப் பின்னுல், நடந்தாய் எம்மை அடக்கியாளும் ஆசையை நெஞ்சிலே வைத்துக் கொண்டு, உன் அழைப்பை ஏற்று இங்கு இனிக்கப் பேசுகிருர் அமைச்சர். நீ ஆவென்று வாயைப் பிளந்தபடி இருந்தாய்.

அடி விழுந்தது, பொலிஸ் தடியடி.

பொலிஸ் யாரைக் கேட்டு அடித்தார்கள்.

அடி விழுந்தபின் யாரைக் கேட்டு என்ன பயன்? விசாரணை வைத்து என்ன பயன்? தமிழன் மானம்போயிற்றே!

அடியே விழாமல் பார்த்துக்கொள்!

அதற்காகத்தான் இனி மேல், அங்கிருந்து வரும் "எஜமானர்களுக்கு" சாமரை வீசாதே!

விருந்து வைக்காதே!

இனிமேல் விருந்து வைத்தாலென்ன? விட்டாலென்ன? பொலிஸ் அடிதப்பாது.

எனவே தான், இதுவரை இருந்த எட்டப்பன், என்ற பட்டத்தை விட்டு, எம்முடன் வந்து சேர்ந்துவிடு. நாம் ஆளுவோம்.

—தென்மட்டுவில் வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி மே 22ம் நாளன்று சட்டமறுப்பு இயக்கமொன்றை நடத்தினர். வட்டுக்கோட்டையில் அண்மையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் பிரகடனத்தை ஒரு துண்டுப் பிரசுரமாகத் தயாரித்து மக்களுக்கு விநியோகித்தனர். யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அரசியல் பிரகடனத்தை மக்களுக்கு வாசித்துக் காட்டிக்கொண்டிருக்கும்போது கைதாகவே, தொடர்ந்து வி. என். நவரத்தினம் பா. உ, க. துரைரத்தினம் பா. உ. பண்டிதர் இரத்தினம் பா. உ. ஆகியோர் பிரகடனத்தைப் படித்து ஒவ்வொருவராக கைதாகினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வருமாறு:-

22-5-76 காலை 9-45 மணிக்கு நவீனமார்க்கட் பக்கத்திலிருந்து மூதறிஞர் செல்வா, திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும்தொண்டர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்தபடி யாழ். பஸ் நிலையத்தை நோக்கி வந்தனர்.

துண்டுப் பிரசுரத்தை வைத்திருப்பதும் சட்ட விரோதமானதால், சில சமயம் துண்டுப் பிரசுரத்தை வாங்க மக்கள் தயங்குவாரகளென்றும், தொண்டர்களே துண்டுப் பிரசுரத்தை வாங்க வேண்டுமென்றும் கூட்டணியினர் ஏற்பாடுசெய்திருந்ததனுல் சொற்ப துண்டுப பிரசுரங்களையே கொண்டுவந்திருந்தனர். ஆனுல மூதறிஞர் செல்வா துண்டுப் பிரசுரத்தை விநியோகிப்பதைக் கண்டதும் பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் கூட பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடிச்சென்று துண்டுப்பிரசுரத்தை வாங்கினுர்கள். சில நிமிடநேரத்துல் மூதறிஞரைச் சுற்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டுவிட்டனர். எல்லாரும் விழுந்தடித்துக் கொண்டு துண்டுப் பிரசுரத்தைப்பெறத்துடி துடித்தார்கள். துண்டுப் பிரசுரம் ஒரு சில மட்டுமே தலைவர்கள் கையிலிருந்தது. அந்நேரம் பஸ் நிலையத்தில் பொலிசார் எவரும் காணப்படவில்லை.

மூதறிஞர்செல்வாவும் திரு. அ. அமிர்தலிங்கமும், பஸ் நிலையத்திலுள்ள கச்சேரி தரிப்பு நிலையத்தில் நின்று துண்டுப் பிரசுரம் விநியோகித்தார்கள். அச்சமயம் அவர்களைச் சுற்றி மக்கள் திரண்டுவிட்டனர். பஸ் நிலையமெங்கும் ஒரே ஜனத்திரளாகக் காட்சியளித்தது.

பஸ் போக்குவரத்தைத் தடைசெய்யவேண்டாமென்றும் பிரயாணிகளை கியூவில் நிற்குமாறும் ஒலிபெருக்கி மூலம் பஸ காரியாலயத்திலிருந்து அறிவிக்கப்பட்டது. இதனுல் மூதறிஞரும், திரு. அமிர்தலிங்கமும தொண்டர்களும் எதிர்ப்பக்கத்திலுள்ள கடைப்பகுதிக்குச் சென்றனர். திரு. அமிர்தலிங்கம், துண்டுப்பிரசுரத்திலுள்ளதை உரக்க வாசித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் மோட்டார் சயிக்கிளில் வந்த பொலிசார், அவ்விடத்தில் சில நிமிடம் நின்று அவதானித்த பின் திரும்பிச்சென்றனர்இதைத் தொடர்ந்துபொலிஸ் ஜீப்புகளும், டிரக்குகளும் பஸ் நிலையத்தை வந்தடைந்தன

அச்சமயம் வின்சர் சந்தியிலிருந்து சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், சேனுதிராசா, சட்டத்தரணி பொன்னையா, ஆர். விசுவநாதன் சட்டத்தரணி கி. நாகராஜா, சட்டத்தரணி எஸ். தம்பித்துரை, எஸ் மயில்வாகனம் ஆகியோர் கஸ்தூரியார் வீதியால் துண்டுப்பிரசுரம் விநியோகித்தபடி பஸ் நிலையத்தை வந்தடைந்தனர். திரு. தா. சங்கரப்பிள்ளை, சட்டத்தரணி சு. நடராசாவும் வந்துசேர்ந்தனர்.

திரு. மூதறிஞர் ஒரு வாங்கில் அமர்ந்திருக்க திரு. அமிர்தலிங்கம துண்டுப் பிரசுரத்தை வாசித்துக்கொண்டிருந்தார். 9-50 மணிக்கு ஒரு ஜீப் வந்து நின்றது. உதவிப்பொலிஸ் அதிபர் திரு. தர்மராசா, இன்ஸ்பெக்டர் திரு. ஆர். பத்மநாதன் ஆகியோர் திரு. அமிர்தலிங்கத்திற்கு

தார். அவரைத் தொடர்ந்து மோட்டார் டிறக்கில் பொலிசார் வந்து கொண்டிருந்தனர். சரியாக காலை 10 மணிக்கு திரு. மு. சிவசிதம்பரமும், பண்டிதர் கா. பொ. இரத்தினமும், திரு. வி. தர்மலிங்கமும் மற்றும் தொண்டர்களும் பஸ் நிலையம் வந்தடைந்தார்கள். மின்சார நிலைய வீதியில் டிறக் ஒன்றில் ஆயுதம் தாங்கிய பொலிசார் நின்றனர்.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் வந்து சேர்ந்தனர்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம்

மற்றொரு தொண்டர் தன்னைக் கைது செய்யுமாறு கூறிய போதும் அவரும் கைது செய்யப்படவில்லை.

## செல்வாவுக்கு குடையும் தொப்பியும்

உச்சிவெயிலில் மூதறிஞர் காலில் செருப்பின்றி மெதுவாக நடந்து செல்வதைப் பார்த்த பஸ் பிரயாணி ஒருவர் தனது குடையை வழங்கினுர். மற்றொரு இளைஞர் தொப்பி ஒன்றையும் வழங்கினுர்.

மின்சாரநிலைய வீதியருகில் மூதறிஞர் அமர்ந்து கொண்டிருக்க மற்றும்

மின்சார நிலையத்தில் நின்ற ஆயுதம்தரித்த பொலிஸ் கோஷ்டியுடன் டிரக் வந்தடைந்தது. ஜீப்வண்டிசெல்ல முடியாத நிலை ஏற்பட்டதும் திரு. சிவசிதம்பரம் கை கூப்பி இளைஞர்களைப் பார்த்து பொலிஸ் ஜீப்பிலிருந்த ஒலிபெருக்கியில் 'தயவு செய்து எனக்காக வழிவிடுங்கள் அமைதியாக இருங்கள்' என்று கூறினுர். அதன் பின்னர் இளைஞர்கள் வழிவிட்டு, பலத்த கரகோஷம் செய்தனர்.

## திரும்பிச்சென்றனர்

மூதறிஞர் கையிலிருந்த துண்டுப்பிரசுரங்கள் யாவும் முடிவடைந்துவிட்டன. மற்றும் கோப்பாய் எம். பி. உடுவில் எம். பி. ஆகியோரிடமிருந்த துண்டுப்பிரசுரங்களும் முடிவடைந்துவிட்டன. இதனுல் கூட்டணியினர் மூதறிஞரை காரில் ஏற்றிச்சென்றனர்.

குல்லாய் அணிந்திருந்த உடுவில் எம். பி. திரு. வி.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைப் பிரகடனம்!

## அமிர்தலிங்கம் கைதுசெய்யப்பட மற்றவர்கள் தொடர்ந்து வாசித்தனர்!

## மே 22ல் நடந்த போராட்ட விபரம்!

அருகில் சென்று தாங்கள் கொண்டுவந்த பத்திரங்களை காட்டி வருமாறு அழைத்தனர். சுற்றித்திரண்டு நின்ற இளைஞர்கள் பலத்த கரகோஷம் செய்தனர். அவ்விடத்தில் மூதறிஞர் இருந்தபோதும் பொலிசார் அவரைப் பார்த்து விட்டுச் சென்றனர்.

### அழைத்துச்சென்றனர்

திரு. அமிர்தலிங்கம் கைதானதும் உடனே திரு. வி. என். நவரத்தினம் துண்டுப்பிரசுரத்தை உரக்கப்படித்தார். உதவி போலிஸ் அதிபர், திரு. நவரத்தினத்தையும் கைது செய்து கூட்டிச் சென்றுர். திரண்டு நின்ற மக்கள் கரகோஷம் செய்தனர். இருவரும் பொலிசாரினுல் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மின்சார நிலைய வீதியில் நின்ற முதலாவது ஜீப்பில் முன் ஆசனத்தில் திரு. வி. என். நவரத்தினம் ஏறிக்கொண்டார். இரண்டாவது ஜீப்பில் முன் ஆசனத்தில் திரு. அ. அமிர்தலிங்கமும் ஏறிக்கொண்டார். இருவருக்கும், அருகில் உள்ள ஒரு கடைக்காரர் குளிர் பானம் வழங்கினுர்.

### வாங்கிய இருவரும் கைது

துண்டுப்பிரசுரம் வாங்கியதாகக்கூறப்படும் 2 இளைஞர்களும் கைது செய்யப்பட்டு, பின்னுல் நின்ற ஜீப்பில் ஏற்றப்பட்டனர்,

காலை 10 மணிக்கு திரு. மு. சிவசிதம்பரம் கே. கே. எஸ். வீதிவழியாகத் துண்டுப் பிரசுரம் விநியோகித்[illegible]

துண்டுப்பிரசுரத்தை உரக்க வாசித்துக் கொண்டிருந்தார். பொலிஸ் உயர் அதிகாரி அவரையும் கைது செய்து கூட்டிச்சென்றுர்.

திரு. துரைரத்தினம் கைதானதும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் துண்டுப் பிரசுரத்தை உரக்கப்படித்துக் கொண்டிருந்தார் இச்சமயம்மேலும் சில ஜீப்புகளில் பொலிசார் வந்து சேர்ந்தனர்.

மூதறிஞர்செல்வாவும் மற்றும் தொண்டர்களும் பஸ் நிலையத்திற்கு எதிரிலுள்ள இடத்திற்கு சென்றுகொண்டிருந்தனர். அச்சமயம் அவர் அருகில் ஜீப் ஒன்று வந்து நின்றது. பொலிஸ் அதிகாரி ஒருவர் இறங்கி அருகில் சென்றுர். சுற்றி நின்ற மக்கள் பலத்த கரகோஷம் செய்தனர். ஆனுல் மூதறிஞர் செல்வாவை பொலிஸ் அதிகாரி கைது செய்யாமலே திரும்பிச் சென்றுர். அவருடன் வந்த

தொண்டர்கள் சுற்றி நின்றுர்கள்.

துண்டுப்பிரசுரத்தை படித்துக்கொண்டிருந்த பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை பொலிஸ் அதிகாரி கைது செய்ததும், திரு. எம். சிவசிதம்பரம் துண்டுப்பிரசுரத்தைப்படிக்கத் தொடங்கினுர். பெருந்திரளான இளைஞர்கள் அவரை சுற்றி நின்றனர்.

காலை 10-30 மணிக்கு இரு ஜீப் வண்டிகள், திரு. சிவசிதம்பரத்திற்கு அருகில் வந்து நின்றதும் பொலிஸ் அதிகாரி அவரை கைது செய்துஜீப்புக்கு அழைத்துச் சென்றபோது இளைஞர்கள் கோஷமிட்டனர். அப்பகுதியில் பெருந்திரளான மக்கள் கூடிவிட்டனர். நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் அவ்விடத்தில் கூடிவிட்டனர், இளைஞர்கள் பொலிஸ் ஜீப்பின முன்னுல் திரண்டுவிட்டனா. அந்த நேரத்தில்

தர்மலிங்கம், திரு. ஆர். விஸ்வநாதன், திரு. வி. யோகேஸ்வரன் ஆகியோரும் கூட்டணி காரியாலயத்திற்கு நடந்துசென்றனர், அவர்களை இளைஞர்கள் பின் தொடர்ந்து செல்ல முற்பட்டனர். தலைவர்கள் இளைஞர்களை அமைதியாகத் திரும்பிச்செல்லுமாறு கூறினுர்கள்.

திருமதி பொன்னுத்துரை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையிலும்மகளிர்பேரவையினரும் துண்டுப்பிரசுரம் விநியோகித்தார்கள். இளைஞர் பேரவையினரும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தார்கள். காலை 11மணிவரை பஸ் நிலையத்தில் பொலிசார் காணப்பட்டனர். இளைஞர்களும், பொதுமக்களும் நண்பகல் வரை நின்ற பின் கலைந்து சென்றனர்.

வின்ஸர் தியேட்டர் சந்தியிலும் துண்டுப் பிரசுரம் வாங்கிய இருவர் பொலிசாரினுல் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

## இன்று கொழும்பில் கருத்தரங்கு!

கொழும்பில் ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும் கருத்தரங்கு இன்றும் மாலை 6 மணிக்கு கொள்ளுப்பிட்டியிலுள்ளதந்தை செல்வாவின் இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது. பல முக்கியஸ்தர்களும் கலந்துகொள்வார்கள்.

## ஹர்த்தால்...

—1-ம் பக்கத் தொடர்

கைது செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் தொகுதிகளான வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, ஆகிய தொகுதிகளுட்பட வடமாகாணம் முழுவதும் மிகவும் கட்டுப்பாடாக நடைபெற்ற இந்த ஹர்த்தாலின்போது, பொதுமக்களும், மாணவர்களும், வர்த்தகர்களும் தாமாகவே முன்வந்து கடைகளை மூடியும், பாடசாலைகளை பகிஷ்கரித்தும், [illegible] கைது செய்யப்பட்டதற்கு தமது ஆட்சேபனையை தெரிவித்தனர். யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, சுன்னுகம், கொடிகாமம், கிளிநொச்சி போன்ற நகரங்கள் அனைத்தும் செத்த வீடு போலக் காட்சியளித்தன.

### கிழக்கிலும் ஹர்த்தால்

மட்டக்களப்பு, திருகோணமலை, கல்குடா, செங்கலடி, பட்டிருப்பு, கல்முனை தொகுதிகளிலும் ஹர்த்தால் நடைபெற்றது. பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டு பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டு காணப்பட்டன.

### முல்லைத்தீவில்

வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களிலும் ஹர்த்தால் நடைபெற்றது. முல்லைத்தீவிலும் கடைகள் பூட்டப்பட்டு, பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. ஹர்த்தாலன்று இரவு முல்லைத்தீவிலுள்ள திரு. செல்லத்தம்பு பா. உ. வின் இல்லத்தில் நடைபெற்ற கருத்தரங்கில், திரு. செல்லத்தம்பு, அடலேறு மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் பங்கேற்றனர்:

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN



தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுப் புகழ்பெற்ற அரசியல் பிரகடனத்தை மாநாட்டுக்குழு உருவாக்கும் காட்சி. படத்தில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன், இராசதுரை பா.உ., மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், சே. மா. செல்லத்தம்பு ஆகியோர் காணப்படுகின்றனர்.

● திருகோணமலையில்

# துண்டுப்பிரசுரம் பறிமுதல்!

## ஏனைய பகுதிகளில் பொலீஸ் தலையீடு இல்லை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மே 22ம் நாள் நடவடிக்கை திட்டமிட்டபடி திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களிலும் நடைபெற்றது. திருகோணமலையில் மட்டும் பொலிசார் துண்டுப்பிரசுரங்களை பறித்தனர். ஏனைய இடங்களில் பொலிஸ் தலையீடு எதுவும் இருக்கவில்லை.

திருகோணமலையில் மே 22ம் திகதி தமிழர்விடுதலைக் கூட்டணியின் அரசியல் பிரகடனத்தைக்கொண்ட துண்டுப் பிரசுரங்களை திருகோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதனும், மூதூர் இரண்டாவது பா. உ. திரு. அ. தங்கத்துரையும், ஏராளமான இளைஞர்கள் பின்தொடர பொதுமக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்தபோது பொலிஸ் அதிகாரியொருவர் இது சட்ட விரோதமானதென்று கூறி அவற்றை அவர்களிடமிருந்து பறிமுதல் செய்தார்.

"உங்களை கைதுசெய்யவும் மாட்டோம்—அதே சமயத்தில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவும் விடமாட்டோம்" என்று கூறியபடி பொலிசார் அவ்விடத்தில் நின்றார்கள். இதைத்தொடர்ந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் முயற்சியை இரு பா. உ.க்களும் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டனர்.

### மட்டக்களப்பில்...

மட்டக்களப்பில், முதல்வர் செ. இராசதுரை மூன்றாம் மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம், பூ. கணேசலிங்கம், ஆகியோர், பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள மார்க்கெட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். மக்கள் உற்சாகத்துடன் இத்துண்டுப் பிரசுரங்களை பெற்றுக் கொண்டனர். பொலிசார் இதைப் பார்த்துக்கொண்டு நின்றனராயினும் எதுவித நடவடிக்கையிலும் இறங்கவில்லை.

### கல்முனையில்...

கல்முனையில் திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ., சட்டத்தரணி சாம் தம்பிமுத்து டாக்டர் உதுமாலெப்பை ஆகியோர் சட்டமறுப்பு துண்டுப் பிரசுர விநியோக நடவடிக்கையிலீடுபட்டனர். இவர்களுடன் இஸ்லாமிய இணைப்புப்பேரவையைச்சேர்ந்த ஏராளமான இஸ்லாமிய இளைஞர்களும் சேர்ந்து இந்த இயக்கத்தில் ஈடுபட்டனர்.

### வவுனியாவில்...

வவுனியாவில் வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு, மூன்றாம் பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் ஆகியோர் வவுனியா கடைவீதியில் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்துக்கொண்டிருந்தபோது, ஒருபொலிஸ் அதிகாரி அவ்விடம் வந்து இது சட்ட விரோதம்" என்றார். உடனே இருவரும் சட்டவிரோதம் என்றால் எம்மைக் கைது செய்யலாம்" என்று கூறியபோதும் பொலிஸ் அதிகாரி எவ்வித நடவடிக்கையுமெடுக்காது அங்கிருந்து சென்றார்.

### மன்னாரில்...

மன்னாரில், உடுப்பிட்டி பா உ. திரு. க. ஜெயக்கொடி, திரு. ஜோண்மார்க், திரு. சௌந்தர நாயகம், திரு. கைலாசபிள்ளை ஆகியோர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். திரு. ஜோண்மார்க் கைதுசெய்யப்பட்டு பின் விடுதலைசெய்யப்பட்டார்.

# தேசிய அரசுப் பேரவைக் கட்டடத்தில் நள்ளிரவில் பரபரப்பு!

# இரு அமைச்சர்கள் மோதல்!

## திருமதி ஒபயசேகராவின் சேலையிலும் இரத்தக்கறை!

தேசிய அரசுப்பேரவைக் கட்டடத்தில் நாட்டை ஆளும் பொறுப்பேற்றுள்ள இரண்டு அமைச்சர்கள் தமக்குள் கைபரிமாறிக்கொண்ட சம்பவமும், இதில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவரான அமைச்சர் ஆரியதாசா இரத்தக் காயமடைந்ததும் அம்பலத்துக்கு வந்துள்ளது. இரு அமைச்சர்களுக்குமிடையே சமாதானம் செய்துவைக்கப் போன மற்றோர் பதில் அமைச்சரான திருமதி சிவா ஒபயசேகராவின் சேலையிலும் இரத்தக்கறை படிந்து காணப்பட்டது இந்தப் பரபரப்பான செய்தியை 22-5-76 சிலோன் டெயிலி மிரர் வெளியிட்டுள்ளது.

குறித்த 'டெயிலிமிரர்' செய்தி கூறுவதாவது:—

"வியாழன் நள்ளிரவு இரண்டு அமைச்சர்களுக்கிடையே நடந்த கைபரிமாறலுடன் தேசிய அரசுப் பேரவையின் நீண்ட கூட்டம் முடிவுக்கு வந்தது.

உள்நாட்டு வருமானவரி சட்ட திருத்த மசோதா நிறைவேறியதைத் தொடர்ந்து ஒத்திவைப்பு நேரத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு டபிள்யூ. பி. ஜி. ஆரியதாசா, ஜா-எல தொகுதி புதிய பா. உ. வின் கேள்வி ஒன்றுக்கு மறுமொழி கூறிக் கொண்டிருந்தார்.

"இச்சமயத்தில், உணவு, கூட்டுறவு, சிறு கைத்தொழில் அமைச்சரான திரு. எழுந்து, திரு. ஆரியதாசாவிடம் சென்று, அவரது பதிலை சுருக்கமாக கூறும்படியும், தான் ஜா-எல எம். பியின் கேள்விக்கு ஏற்கெனவே நீண்ட பதில் அளித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

"இதைத் தொடர்ந்து தனது ஆசனத்திலமர்ந்த திரு. ஆரியதாசா, பின்னர் எழுந்து, சூரியாராய்ச்சியின் வேண்டுகோட்படி தாம் தொடர்ந்து பதிலளிக்கப் போவதில்லையென சபாநாயகரிடம் தெரிவித்தார்.

'இதைத்தொடர்ந்து சபாநாயகர் சபையை ஒத்திவைத்ததையடுத்து, திரு. சூரியாராய்ச்சியும், ஆரியதாசாவும் ஒன்றாகக் காணப்பட்டனர். இச் சமயத்தில் திரு. ஆரியதாசாவை நோக்கி விழுந்த ஓர் அறை, அவரை அப்படியே அவரது ஆசனத்தில் அமர வைத்தது.

"இரத்தம் கொட்டக் கொட்ட திரு. ஆரியதாசா காணப்பட்டார்.

இச் சமயத்தில் சபையிலிருந்த ஏனைய இரண்டு பா-

திரு. ஜே. மைக்கல் பெரேராவும், சுகாதாரபதிலமைச்சர் திருமதி சிவா ஒபயசேகராவுமேயாகும், திரு. பெரேராவும், திருமதி ஒபயசேகராவும் தொடர்ந்து மோதல் ஏற்படாமல் தடுப்பதில் ஈடுபட்டார்கள். இதனால் திருமதி ஒபயசேகராவின் சேலையிலும் இரத்தக்கறை காணப்பட்டது!

"எனினும், சபை 'லொபியில்' இரண்டாவது றவுண்ட் மோதல் தொடங்கியது. இரண்டு அமைச்சர்களும் காணப்பட்டனர். இச் சமயத்திலும் அங்கிருந்த பலரும் அவர்களைப் பிரித்து விட்டனர்.

"சபாநாயகரும் தனது அறையிலிருந்து வெளியே வந்து, சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினார்"

—இவ்வாறு அச் செய்தி கூறுகிறது.

## தமிழர் தளபதி...

—1-ம் பக்கத் தொடர்

ஒரு விசேட விமானத்தில் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர். கொழும்பில் இரகசிய பொலிஸ் பிரிவுக்கு சொந்தமான பஜெட் வீதியிலுள்ள விடுதியொன்றில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுப்புக் காவலிலிருக்கும் நான்கு தலைவர்களும் சிரித்த முகத்துடன் மிகவும் உற்சாகமாகக் காணப்படுகின்றனர்

(மேலும் விபரம் உள்ளே

மில்க்வைற் செய்தி இதழ்-5

5 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பிவைத்து 'மில்க்வைற் செய்தி இதழ்' - 5 ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org